

வேலூர் மாவட்டம், காட்பாடி கழிஞ்சூர் நகரத்தைச் சேர்ந்த தலைமைகழக பேச்சாளர் மாவட்ட பிரதிநிதி கே.ஏ.கண்ணன் அவர்கள் இயற்கை எய்தினார். அவருக்குவேலூர் தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மாவட்டச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் மலர் மாலை வைத்து இறுதி மரியாதை செலுத்தினார். உடன் குடியாத்தம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் அமலுவிஜயன், மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய,நகர, பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள், மாநகர நிர்வாகிகள், தலைமை செயற்குழு மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள், தலைமை கழக நிர்வாகிகள் மாநில,மாவட்ட கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், ஆகியோர் கலந்து கொண்டு மரியாதை செலுத்தினர்.



விளாத்திகுளம் வட்டம் குளத்தூர் இந்து நாடார் உறவின்முறை சங்கத்திற்கு பாத்தியப்பட்ட அன்னை ஸ்ரீ பத்திரகாளியம்மன் திருக்கோவில் ஆனி பெருந்திருவிழா மற்றும் பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, குளத்தூர் காமராஜர் ஸ்போர்ட்ஸ் அகாடமி நடத்தும் 62ம் ஆண்டு தென்னிந்திய அளவிலான மாபெரும் பெண்களுக்கான மின்னொளி கபாடி போட்டியினை முன்னாள் அமைச்சர், திருச்செந்தூர் சட்டமன்ற உறுப்பினர் அனிதா ராதாகிருஷ்ணன், கோவி. செழியன், ஜீ. வி. மார்க்கண்டேயன் ஆகியோர் இணைந்து துவக்கி வைத்தனர்.நிகழ்வில் மாநில வர்த்தக அணி துணைச் செயலாளர் எஸ். ஆர். எஸ்.உமரிசங்கர், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் பை.மூ.ராமஜெயம், ஒன்றிய செயலாளர்கள் சின்னமாரிமுத்து, ராமசுப்பு, அன்புராஜன், இம்மானுவேல், விளாத்திகுளம் பேரூர் கழகச் செயலாளர் வேலுச்சாமி, பொதுக்குழு உறுப்பினர் ராஜாக்கண்ணு, ஒன்றிய துணைச் செயலாளர் ராஜபாண்டி, விளாத்திகுளம் சட்டமன்ற தொகுதி தகவல் தொழில் நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் ஸ்ரீதர், உள்ளிட்ட கழக நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### பெரம்பலூர் மாவட்டம்

# குன்னம் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம்!

## முன்னாள் அமைச்சர் சா.சி.சிவசங்கர் எம்.எல்.ஏ. திறந்து வைத்தார்!

பெரம்பலூர்,ஜூலை,19–

பெரம்பலூர் மாவட்டம், குன்னம் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தை திறந்து வைத்த முன்னாள் அமைச்சர் சா.சி.சிவசங்கர்.எம்.எல்.ஏ. செய்தியாளர்களை சந்தித்தார்.

அப்போது, அவர் குறிப்பிட்டதாவது:–

விஜய் தொடர்ச்சியாக ரெண்டே பேருக்கு தான் போட்டி ஒன்று தி.மு.க இன்னொன்று த.வெ.க.

என சொல்லி வருவதையே, திருமாவளவன் சொல்லியுள்ளார் என நினைக்கிறேன். இதன் மூலமாக அ.தி.மு.க.வை காலி செய்து விடலாம் என்கின்ற எண்ணத்தில் த.வெ.க.வும், விஜயும் இருக்கிறார்கள். ஆனால் பா.ஜ.க. இன்னொரு கோணத்தில் இயங்குகிறது. இதையெல்லாம் சூசகமாகத்தான் திருமாவளவன் பேட்டியாக சொல்லி உள்ளார் என நான் நினைக்கிறேன்,

**தமிழ்நாட்டில் திராவிடக் கட்சிகளை அழித்தொழிக்க பா.ஜ.க. முயல்கிறது என திருமாவளவன் தெரிவித்துள்ளது குறித்த கேள்விக்கு...**

திருமாவளவன் ஜனாதிபதி ஆட்சி வந்து விடக்கூடாது சட்டமன்றம் கலைக்கப்பட்டு விடக்கூடாது எனும் சூழலில் ஆதரவு அளிப்பதாக ஏற்கனவே சொல்லியுள்ளார், இந்த சூழலில் இன்று நடக்கின்ற நடப்புகள் அவரை இந்த செய்திகளை சொல்ல வைத்து இருக்கிறது அவர் எப்போதும் அரசியலை கூர்ந்து பார்த்து பதில் சொல்லக்கூடியவர். எனவே அவர் அரசியலை கூர்ந்து பார்த்து இந்த கருத்துக்களை தெரிவித்ததாக தான் நான் நினைக்கிறேன்.

விஜயின் த.வெ.க. ஆட்சி அமைந்ததில் இருந்து இரு விஷயங்கள் குறிப்பிடத்தக்கதாக இருக்கிறது.

விடிந்தால் இன்று என்ன நடக்குமோ எனும் பதட்டமாக இருக்கும், மற்றொன்று தினமும் இவர்களே பரபரப்பை கிளப்புகின்ற வகையில் ஏதாவது செய்து கொண்டுள்ளனர். ஆட்சியும் இவர்கள் கட்டுப்பாடு இல்லாமல் குதிரைபேரத்தில் ஈடுபடுவது தான் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு செய்தியாக வருகிறது.

பாலியல் குற்றங்கள், லாக்கப் மரணங்கள் காவல்துறை அத்துமீறல்கள் என பல செய்திகள் தொடர்ந்து வந்த வண்ணம் உள்ளது ஆனால் ஒரு செய்திக்கும் முதலமைச்சர் வாய் திறப்பதே இல்லை.

கடந்த காலத்தில் எந்த சம்பவம் நடந்தாலும் அந்த சம்பவத்திற்கு தனது கருத்தை வெளிப்படுத்துவார், லாக்கப் மரணங்கள் நடந்தால் அந்த குடும்பத்தி னரிடம் மன்னிப்பு கேட்டு வருத்தம் கேட்ட செய்திகளெல்லாம் உண்டு. அதை அன்று விஜய் கிண்டல் செய்தார். சாரி சொல்லாதீங்க எங்களுக்கு நீதி தான் வேண்டும் என்றார்.

ஆனால் இன்று அந்த சாரி சொல்லக்கூட இவர் தன்னுடைய கருத்தை வெளிப்படுத்த தயாராக இல்லை. அதேபோன்று ஒன்றிய அரசின் பல்வேறு நெருக்கடிகள் குறித்தும் வாய் திறக்க இவர் தயாராக இல்லை.

அவர் நினைக்கின்ற போது மேடை ஏறி தனது கருத்தை சொல்லிவிட்டு போய்விடலாம் அதை தமிழ்நாட்டு மக்கள் ஏற்றுக்கொள்வார் என அவர் நினைத்துக் கொண்டிருக்கின்றார்.

அவரது ரசிகர்களும், ரசிக மனப்பான்மையும் வாக்களித்தவர்கள் தான் அவர் சொல்லும் செய்திக்காக காத்திருக்கின்றனர், மற்ற தமிழ்நாட்டு மக்களை பொறுத்த அளவு ஒரு முதலமைச்சராக தன்னுடைய கடமையை அவர் ஆற்ற வேண்டும் என எதிர்பார்க்கின்றனர்.

இப்படி அவர் எதற்கும் வாய் திறக்காமல் மௌனமாக இருப்பது மக்களை அவமானப்படுத்துவது போன்றது என்பதை அவர் என்று தான் உணரப்போகிறாரோ? என்பது தான் இன்று கேள்விக்குறியாக?உள்ளது.

த.வெ.க. கூட்டணியில் இடம் பெற்றிருக்கக் கூடிய எங்களுடைய பழைய தோழர்களுக்கு, த.வெ.க.வின் செயல்பாடுகளை ஏற்றுக் கொள்ளவும் முடியாமல், அதே சமயத்தில் எடுத்த முடிவுகளில் இருந்து பின்வாங்கவும் முடியாமல் மன உளைச்சலில் உள்ளனர். அதைத்தான் அவர்களது சமீபத்திய பேட்டிகள் காட்டுகிறது.

குறிப்பாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநில செயலாளர் வீரபாண்டியன் மிகத் தெளிவாக பேசக்கூடிய கொள்கைவாதி. ஆனால், ஒவ்வொரு நாளும் காலை, மாலை என அவர் அளிக்கும் பேட்டியே வித்தியாசமாக உள்ளதை எல்லோரும் உணர்ந்து இருக்கின்றனர். காலம் தான் இதற்கெல்லாம் முடிவு சொல்லும்.

தி.மு.க. கூட்டணியில் அவர்கள் இருந்தபோது அவர்கள் நினைத்த நேரத்தில் கூட்டணியின் தலைவரான மு.க.ஸ்டாலினை சந்தித்தனர். பல்வேறு கருத்து களை விவாதிக்கக்கூடிய வாய்ப்பு இருந்தது.

ஆனால் த.வெ.க. தலைவரை அவர்கள் சந்திப்பதே, இன்று பெரிய செய்தியாக வரும் சூழல் மாறி இருக்கிறது. அந்த இடைவெளி என்பது கூட்டணி யில் அரவணைப்பு குறைந்திருக்கிறது என்பதுதான் இப்போதைய சூழல்.

அ.தி.மு.க.வினர் இப்போது தூக்கத்தில் இருந்து எழ வேண்டும். தேர்தல் பிரச்சாரத்தின் போது கொடி பறக்கிறது பார், விரைவில் மிகப்பெரிய கட்சிக்காக காத்திருக்கிறேன் என்றெல்லாம் எடப்பாடி பழனிச்சாமி தொடர்ச்சியாக சொல்லி வந்தார். அதன் காரணமாகவே அதிமுக தொண்டர்கள் நிலை குலைந்து போயினர். அதுதான் சென்னையில் 4 மாவட்ட தோல்விக்கு காரணம். இனியாவது அதிமுக விழித்துக் கொள்ள வேண்டும்.

நாங்கள் தான் அ.தி.மு.க. என ஆதவ் அர்ஜுனா தொடர்ச்சியாக சொல்லி வருகிறார். அதை நிர்மல் குமார் வழிமொழிகிறார். அ.தி.மு.க.வின் அடிமட்ட தொண்டர்கள் இதை துளியும் விரும்ப வில்லை.

அ.தி.மு.க. தலைமை இன்று ஏற்படுத்தியிருக்கும் தோல்வி, த.வெ.க. வெற்றிக்கு காரணமாக அமைந்திருக்கிறது. இதனால் அ.தி.மு.க. தொண்டர்கள் மிகுந்த மன வருத்தத்தில் உள்ளனர். எனது குன்னம் தொகுதி நன்றி அறிவிப்பு நிகழ்ச்சியில் அதிமுக தொண்டர்கள் அதைத்தான் என்னிடம் சொல்லினர்.

தி.மு.க.–அ.தி.மு.க. கூட்டணி என மற்றவர்கள் பரப்பும் கருத்துக்கு, கதைகளுக்கு திமுக பதில் சொல்ல வேண்டும் என எதிர்பார்ப்பது, ஒரு நேரட்டிவ் செட்டிங்தான். அந்த பிரச்சினையே இல்லை. குறிப்பாக த.வெ.க. வியூக வகுப்பாளர்கள், ஆதவ் அர்ஜுனாவின் கூட்டம் தான் இந்த செய்தியை பரப்புகிறது.

இல்லாத செய்தியை பரப்புகிற ஒரு கோயபல்ஸ் ஹிட்லருடைய காலம் போல் பிரச்சார பயணம் தான் இன்றைக்கு விஜய் ஆட்சி நடக்கிறது விஜய் கரூர் செல்வதை ஒரு காலமும் தி.மு.க. தவிர்ப்பதற்கு நீதிமன்றம் செல்லவில்லை ஆனால் அன்று வந்த தலைப்பு செய்திகள் முழுவதும் விஜயன் ரூட் மாபியா மூலமாக விஜய் கரூர் செல்வதை தடுப்பதற்காக திமுக மனு போட்டதாக செய்தியை பரப்பினர்.

தி.மு.க. தாக்கல் செய்த மனு நீதிமன்றத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அப்படி எந்த வார்த்தையும் அதில் இல்லை. எனவே தொடர்ந்து அவர்கள் செய்வதெல்லாம் தலைப்பு செய்திகளை கொடுத்து அதன் மூலமாக மக்களை திசை திருப்புகலாம் என்கின்ற எண்ணத்தில் திமுக அதிமுக கூட்டணி கொடுத்த செய்தியும்.

தி.மு.க. முழு செயல்பாட்டில் களத்தில் உள்ளது. ஆறு மாத காலத்திற்கு இந்த அரசின் சில விஷயங்களை விமர்சிக்க வேண்டாம் என எங்கள் தலைவர் சொல்லியுள்ளார். ஆனால் மக்கள் பொறுத்து இருக்க வில்லை என்பதை நீங்கள் உணர வேண்டும்.

கன்னியாகுமரியில் சபரிவர்மன் கஸ்டடி மரணம் அடைந்திருக்கிறார் அங்கு மக்கள் கொந்தளிப்பில் உள்ளனர். பழனியில் அறநிலைத்துறைக்கு சொந்தமான இடத்தை தனியாருக்கு விற்று உள்ளது நீதிமன்றமே தலையிட்டு கண்டனம் தெரிவித்துள்ளது. அதையும் மூடி மறுத்து திசை திருப்பின்ற விஷயமாக அமைச்சர் பெருமக்கள் பதில் சொல்லிக் கொண்டுள்ளனர்.

மக்கள் களத்திற்கு வந்துவிட்டனர் தி.மு.க. எதிர்காலத்தில் இந்த அரசை முழுமையாக வெட்ட வெளிச்சப் படுத்தி தி.மு.க.வின் செயல்பாடுகள் தொடரும்.

தி.மு.க. – அ.தி.மு.க. செய்த திட்டங்களை ஸ்டிக்கர் ஒட்டிக் கொள்ள தாவீகா முயற்சிக்கிறது. இரண்டு நாட்களுக்கு முன்பாக கூட தி.மு.க. ஆட்சியில் எம்ஆர்பி மூலமாக தேர்வு நடத்தப்பட்டு தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு பணி ஆணை வழங்கியுள்ளனர். ஆனால் இந்த 60 நாட்களில் ஏதோ இவர்கள் அறிவிப்பு கொடுத்து தேர்வு நடத்தி அவர்களுக்கு பணி வழங்கியது போல ஒரு ஷோ நடத்துகின்றனர்.

தி.மு.க. செய்த நல்லவற்றையெல்லாம் தாங்கள் செய்தது போல சொல்லுகின்ற அதே வேளையில் தி.மு.க. மீது ஊழல் குற்றச்சாட்டுகளை சுமத்தி அழித்து விடலாம் என நினைக்கின்றனர். மக்கள் அனைவருக்கும் நன்றாக தெரியும். விடியல் பயணத்திட்டம், நான் முதல்வன் திட்டத்தை யார் கொண்டு வந்தது என அவர்கள் அறிவார்கள். இவர்கள் பெயரை மாற்றலாம் மக்கள் மறக்க மாட்டர்.

பா.ஜ.க. எல்லா மாநிலங்களிலும் தங்களது ஆட்சி வரவேண்டும் என விரும்புகின்றனர் அப்படி விரும்புகின்ற போது சில மாநிலங்களில் நேரடியாக அவர்களால் களத்திற்கு சென்று செயல்பட முடியாது அதனால் வேறு சக்திகளை இயக்கி உள்ளே நுழைவது வழக்கம் அப்படி தான் அண்ணாமலையை பாஜகவில் இருந்து வெளியே வர வைத்து தற்போது கட்சி துவங்கியுள்ளனர்.

இவ்வாறு முன்னாள் அமைச்சர் சா.சி.சிவசங்கர் தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு துணைச் செயலாளர் பா.துரைசாமி, வேப்பூர் தெற்கு ஒன்றிய செயலாளர் சி.ராஜேந்திரன், வேப்பூர் வடக்கு ஒன்றிய செயலாளர் தி.மதியழகன், மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர் டாக்டர் அ.கருணாநிதி, மாவட்ட விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர் ஏ.எம்.கே.கரிகாலன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் வட்டம் மீனாட்சிபுரம் கிராமத்தில் ஸ்ரீ காளியம்மன் திருக்கோவில் கோடை விழாவை முன்னிட்டு, மாபெரும் மாட்டு வண்டி எல்கை பந்தயத்தினை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர், ஜீ.வி. மார்க்கண்டேயன் கொடியசைத்து துவக்கி வைத்தார். நிகழ்வில் ஒன்றிய செயலாளர்கள் சின்னமாரிமுத்து, இம்மானுவேல், புதூர் பேரூர் கழக பொறுப்பாளர் வெற்றிவேலன், சூரங்குடி முன்னாள் கூட்டுறவு சங்க செயலாளர் ராமச்சந்திரன், கிளைச் செயலாளர் கண்ணன், மகளிர் அணி ஈஸ்வரி, பாக டிஜிட்டல் ஏஜெண்ட் முத்துப்பாண்டி, உள்ளிட்ட கழக நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# இனம், மொழி, பண்பாடு காத்தவர் நம் தலைவர்!

## தமிழ்நாடு நாளையொட்டி – முன்னாள் அமைச்சர் தங்கம் தென்னரசு வலைதளப் பதிவு!



**சென்னை, ஜூலை 19-**

**தமிழ்நாடு நாள் இன்று தமிழ்நாடு முழுவதும் கொண்டாடப்பட்டு வருகிறது. இந்நிலையில், ஜூலை 18ஆம் தேதியை தமிழ்நாடு நாளாகவும், மெட்ராஸ் மாகாணத்திற்கு தமிழ்நாடு என பெயர் சூட்டியதும் தி.மு.க. அரசுதான் எனக் குறிப்பிட்டு முன்னாள் அமைச்சரும், திருச்சுழி சட்டமன்ற உறுப்பினருமான தங்கம் தென்னரசு பதிவிட்டுள்ளார்.**

முன்னதாக, தமிழ்நாடு முதலமைச்சர் ச.ஜோசப் விஜய், நமது மாநிலத்திற்கு தமிழரின் தொன்மை, வரலாறு, பண்பாடு, மொழியுணர்வைப் போற்றும் வகையில் “தமிழ்நாடு” எனப் பெயர் சூட்ட தீர்மானம் இந்நாளில் நிறைவேற்றப்பட்டது. மெட்ராஸ் மாநில மாக உருவான நவம்பர் 1ஆம் நாளையும், ‘தமிழ்நாடு’ எனும் பெயர் சூட்ட பேரறிஞர் அண்ணா சட்டமன்றத்தில் வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானம் முன்மொழியப்பட்டு நிறைவேற்ற ப்பட்ட ஜூலை 18ஆம் நாளையும் இந்த அரசு கொண்டாடும் என எக்ஸ் சமூக வலைத்தளப்பக்கத்தில் பதிவிட்டிருந்தார்.

இந்நிலையில், இதற்கு பதிலளிக்கும் விதமாக முன்னாள் அமைச்சர் தங்கம் தென்னரசு, எல்லாவற்றிற்கும் தி.மு.க. தான் காரணம் என்பீர்கள்; ஆனால் இதற்கு உண்மையிலேயே தி.மு.க. அரசுதான் காரணம். ‘மெட்ராஸ் மாநிலம்’ என்ற பெயரை ‘தமிழ்நாடு’ என மாற்றியதும், ஜூலை 18ஆம் தேதியை தமிழ்நாடு நாளாக அறிவித்ததும் தி.மு.க. அரசுதான் என்று தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக தனது எக்ஸ் சமூக வலைத்தளப்பத்தில் தங்கம் தென்னரசு பதிவிட்டுள்ளதாவது:-

“இந்த இரண்டையுமே செய்தது தி.மு.க. அரசுதான். தமிழ்நாடு நாள் ஜூலை 18 அன்று கொண்டாடப்படுவதற்குக் காரணம் என்ன?

நவம்பர் 1ஆம் தேதியைத் தமிழ்நாடு நாளாகக் கொண்டாடுவது பொருத்தமற்றது என்று பல்வேறு அறிஞர்கள் அரசுக்குக் கோரிக்கை விடுத்தனர்.

மொழிவாரி மாநிலங்கள் பிரிக்கப்பட்ட நாளான நவம்பர் 1ஆம் தேதியைத் தமிழ்நாடு நாளாக எவ்வாறு கொண்டாட முடியும்? அந்த நாளில், மொழிவாரி மாநிலங்கள் பிரிக்கப்பட்ட போது தமிழ்நாடு பெற்றதைவிட இழந்ததே அதிகம். எனவே, அந்த நாளைத் தமிழ்நாடு நாளாகக் கொண்டாடுவது சரியல்ல என்று அவர்கள் வலியுறுத்தினர்.

மேலும், அன்னைத் தமிழ்நாட்டிற்கு “தமிழ்நாடு” என்ற பெயரைச் சூட்டுவதற்காகத் தியாகி சங்கரலிங்கனார் உயிர்நீத்ததும், எண்ணற்றோர் போராடியதும் வரலாறு. “பெயரில் என்ன இருக்கிறது?” என்று தமிழினத்திற்கான தனித்துவமான அடையாளத்தை வழங்க மறுத்த ஆதிக்க மனப்போக்கிற்கு எதிராகப் போராடி, ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பேரறிஞர் அண்ணா தலைமையிலான திமுக அரசுதான் இந்த மாநிலத்திற்கு “தமிழ்நாடு” என்ற பெயரைச் சூட்டியது.

அந்த வரலாற்றுச் சிறப்புமிக்க நாளைத் தமிழ்நாடு நாளாகக் கொண்டாடுவது தமிழ்நாட்டிற்குப் பெருமை சேர்க்கும் என்று கருதிய முன்னாள் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், ஜூலை 18ஆம் தேதியைத் தமிழ்நாடு நாளாகக் கொண்டாட ஆணையிட்டார்.

அதே நேரத்தில், தமிழ்நாட்டின் எல்லைகளைக் காக்க இன்னுயிர் நீத்துப் போராடிய தியாகிகளைப் போற்றும் வகையில் நவம்பர் 1ஆம் தேதியை “எல்லைப் போராட்டத் தியாகிகள் நாள்” என அறிவித்ததுடன், அவர்களுக்கான ஓய்வூதியத்தையும் உயர்த்தினார். இனம், மொழி, பண்பாடு காத்தவர் நம் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

இவ்வாறு அப்பதிவில், தங்கம் தென்னரசுஎம்.எல்.ஏ. குறிப்பிட்டுள்ளார்.

# தமிழ்நாட்டில் இடைத்தேர்தல் இப்போது கிடையாது!

## தலைமை தேர்தல் ஆணையர் திட்டவட்டம்!

*புதுடெல்லி, ஜூலை 19-*

*தமிழ்நாட்டில் இடைத் தேர்தல் இப்போதைக்கு கிடையாது என்று தலைமை தேர்தல் ஆணையர் திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.*

*இந்திய தேர்தல் ஆணையத்தின் சார்பில் இரண்டு நாள் மாநாடு டெல்லியில் நடைபெற்றது. முதல் நாள் கூட்டத்தில் பல்வேறு முக்கிய ஆலோசனைகள், அதாவது தேர்தல் நடைபெறும் விதிமுறைகள் உட்பட அனைத்து தொடர்பாகவும் ஆலோசனை நடத்தப்பட்டது.*

*தமிழ்நாட்டில் காலியாக இருக்கும் தொகுதிகளுக்கு எப்போது இடைத்தேர்தல் நடத்தப்படும் என்று செய்தியாளர்கள் தரப்பில் இந்திய தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமாரிடம் கேள்வி எழுப்பப்பட்டது.*

*அதற்கு பதில் அளித்த இந்திய தலைமை தேர்தல் ஆணையர், தமிழ்நாட்டில் காலியாக இருக்கும் தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் நடத்துவது தொடர்பாக தற்போது எந்தவித ஆலோசனையும் மேற்கொள்ள வில்லை என்று தெரிவித்தார். தமிழ்நாட்டில் காலியாக இருக்கும் தொகுதிகள் தொடர்பாக தேர்தல் வழக்குகள் அனைத்தும் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளதால், அதனை கருத்தில் கொள்ள வேண்டிய சூழ்நிலை இருப்பதாகவும் தலைமைத் தேர்தல் ஆணையர் கூறினார்.*

### சென்னை கிழக்கு மாவட்ட துணைச் செயலாளர்

# தேவஜவகர் மாமனார் மறைவு!

## மாவட்டச் செயலாளர் பி.கே.சேகர்பாபு - கழகத்தினர் அஞ்சலி!



*சென்னை, ஜூலை, 19*

*சென்னை கிழக்கு மாவட்ட கழக துணை செயலாளர் தேவஜவகர் மாமனாரும், ஓய்வு பெற்ற காவல் உதவி ஆய்வாளர் டி.அமிர்தவேல் அவர்கள் நேற்று (18.07.2026 சனிக்கிழமை) காலை 3.00 மணியளவில் இயற்கை எய்தினார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.*

*அன்னாரின் மறைவு செய்தி அறிந்ததும் சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர், முன்னாள் அமைச்சர் பி.கே. சேகர்பாபு, மாவட்ட, பகுதி, வட்டக் கழகச் நிர்வாகிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், கழக முன்னோடிகள் பலர் அன்னாரின் உடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர்.*

*அன்னாரின் இறுதி ஊர்வலம் இன்று (19.07.2026 ஞாயிற்றுக்கிழமை) காலை 11 மணிக்கு, அன்னாரின் இல்லம் கொளத்தூர், ஜி.கே.எம். காலனி, 38 வது தெருவில் இருந்து புறப்பட்டு கொளத்தூர், ஜம்புலிங்கம் மெயின் ரோடு, ஜி.கே.எம். காலனியில் உள்ள இடுகாட்டில் நல்லடக்கம் செய்யப்படுகிறது.*

### ‘இரண்டாம் வகுப்பு பயணிகள்’ என்ற பிரயோகத்தை மாற்றவேண்டும்!

# இரயில்வே துறைக்கு உச்சநீதிமன்றம் உத்தரவு!

## ‘அரசியலமைப்பின் உணர்வுக்கு எதிரானது’ எனக் கருத்து!

*புதுடெல்லி, ஜூலை 19-*

*இரண்டாம் வகுப்பு பயணிகள் என்ற பிரயோகத்தை மாற்ற வேண்டும் என்று ரயில்வே துறைக்கு உச்சநீதி மன்றம் உத்தரவிட்டுள்ளது. இது அரசியலமைப்பின் உணர்வுக்கு எதிரானது என்று கூறியுள்ளது.*

*ரயில்வே விபத்து தொடர்பான வழக்கு ஒன்று உச்சநீதிமன்றத்தில் நீதிபதிகள் சஞ்சய் கரோல், கோடீஸ்வர் சிங் அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது, ரயில் நிலையங்களில் நிலவும் அதிகப்படியான கூட்டத்தை குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் இதுவும் விபத்துக்களுக்கு காரணமாக உள்ளதாக நீதிபதிகள் குறிப்பிட்டனர்.*

*பின்னர், இரண்டாம் வகுப்பு பயணி என்று குறிப்பிட்டதை சுட்டிக்காட்டிய நீதிபதிகள், இது பயணக் கட்டணம் தொடர்புடையது என்றாலும் அரசியலமைப்பு உணர்வுகளுக்கு முரணானதாக உள்ளதாக கூறினர். எனவே இரண்டாம் வகுப்பு பயணி என்று குறிப்பிடக்கூடாது என்று தெரிவித்தனர். உயர்வகுப்பு, கீழ் வகுப்பு பயணிகள், இரண்டாம் வகுப்பு பயணிகள் என்று ரயில்வே துறை பயணிகளை குறிப்பிடுவதை கைவிட வேண்டும் என்று உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.*

*ரயில்களில் 2ஆம் வகுப்பு என்ற வார்த்தையை மாற்ற வேண்டும் - உச்சநீதிமன்றம் ரயில்வே விபத்து தொடர்பான வழக்கு ஒன்று உச்சநீதிமன்றத்தில் நீதிபதிகள் சஞ்சய் கரோல், கோடீஸ்வர் சிங் அமர்வில் விசாரணைக்கு வந்தது*

*ரயில் நிலையங்களில் நிலவும் அதிகப்படியான கூட்டத்தைக் குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் - நீதிபதிகள் ரயில் நிலையங்களில் கூட்டம் அதிகரிப்பதும் விபத்துகளுக்குக் காரணமாக உள்ளது - நீதிபதிகள் இரண்டாம் வகுப்பு பயணி என்று குறிப்பிடுவது அரசியலமைப்பு உணர்வுகளுக்கு முரணானதாக உள்ளது இரண்டாம் வகுப்பு பயணி என்று குறிப்பிடக்கூடாது - நீதிபதிகள் உயர்வகுப்பு, கீழ் வகுப்பு பயணிகள், இரண்டாம் வகுப்புப் பயணிகள் என்று ரயில்வே துறை பயணிகளை குறிப்பிடுவதைக் கைவிட வேண்டும்*